ராமநாதபுரத்தில் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் கூட்டம்

பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இந்தியாவை யாராலும் காப்பாற்ற முடியாது: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு

பாரதீய ஜனதா மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இந்தியாவை யாராலும் காப்பாற்ற முடியாது என தி.மு.க. வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆவேசமாக பேசினார்.

ராமநாதபுரம், ஆக.18– தி.மு.க. தென்மண்டலத்தில் உள்ள 10 நாடாளுமன்ற தொகுதிகளுக்கான வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் கூட்டம் நேற்று ராமநாதபுரம் பேராவூரில் நடந்தது. தி.மு.க. மூத்த நிர்வாகிகள், அமைச்சர்கள், எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் உள்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

இந்த கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு பேசியதாவது:–

நமக்கு எதிராக அவதூறு, பொய் பிரச்சாரம் செய்யும் சிறுநரிக்கூட்டம் ஒன்று செயல்பட்டு வருகிறது. சமூக ஊடகங்கள் சிறப்பான பரப்புரை களமாக மாறி உள்ளது. எனவே, அனைவரும் சமூக ஊடகங்களில் கணக்கு தொடங்க வேண்டும். அதனை முழுமையாக பயன்படுத்த வேண்டும்.

அண்ணா தி.மு.க., பாரதீய ஜனதா செய்வதை போல பொய் பிரச்சாரம் செய்ய வேண்டாம். நமது சாதனைகளை மட்டும் சொன்னால் போதுமானது. நடக்க உள்ள நாடாளுமன்ற தேர்தலில் நமது கூட்டணி முழுமையாக வெற்றி பெற வேண்டும். தற்போது ஆட்சியில் உள்ள பா.ஜ.க. நாட்டை சின்னா பின்னமாக்கி விட்டது. மீண்டும் ஒரு முறை பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் இந்தியாவை யாராலும் காப்பாற்ற முடியாது.

மோடி வாக்குறுதிகளை நிறைவேற்றினாரா?

பதவிக்கு வரும் முன் மோடி பல வாக்குறுதிகளை கொடுத்தார். அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றினாரா? நாட்டு மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியின்படி கருப்பு பணத்தை ஒழித்து ஆளுக்கு ரூ.15 லட்சம் கொடுத்தார்களா? ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை கொடுத்தாரா?

இதில் ராமநாதபுரத்தில் அவர் போட்டியிட போகிறார் என்கின்றனர். ராமேசுவரத்தை சர்வதேச சுற்றுலா தலமாக மாற்றுவோம் என்றார். பாதாள சாக்கடை பணிகளை தவிர எதுவும் நடக்கவில்லை. அதையும் அ.தி.மு.க. ஆட்சியில் முழுமையாக செய்யவில்லை.

புயலால் அழிந்து போன ராமேசுவரம்–தனுஷ்கோடி ரெயில் பாதை திட்டத்தை கொண்டு வருவோம் என்றார். இதுவரை எதுவும் நடக்கவில்லை. மோடி சுட்ட பல வடைகளில் இந்த வடையும் ஒன்று.

9 வருடங்கள் கழித்து எய்ம்ஸ் டெண்டர்

மத்திய அமைச்சராக அருண்ஜெட்லி இருந்தபோது சொன்ன மதுரை எய்ம்ஸ் திட்டம் செங்கலுடன் நின்றுவிட்டது. 9 வருடங்கள் கழித்து தற்போதுதான் டெண்டர் விட்டுள்ளனர். இதுவும் நாடாளுமன்ற தேர்தலுக்கான நாடகமா? என்பது தெரியவில்லை.

பல ஆயிரம் கோடி ஜி.எஸ்.டி. வரியை தமிழகத்திடம் இருந்து பெறும் மத்திய அரசுக்கு தனது நிதியில் இருந்து, மதுரையில் எய்ம்ஸ் கட்டித்தர மனமில்லை.

பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு என்ன பேசினார் என்பதே தெரியாமல் 'வாட்ஸ்அப்'பில் வந்த வெட்டி ஒட்டப்பட்ட தகவலை அப்படியே நாடாளுமன்றத்தில் பொறுப்பற்ற முறையில் பிரதமர் பேசியுள்ளார்.

திராவிட நாடு கோரிக்கையை வலியுறுத்தியபோது எம்.ஜி.ஆர். தி.மு.க.வில்தான் இருந்தார். "அச்சம் என்பது மடமையடா... அஞ்சாமை திராவிடர் உடைமையடா..." என்று வாய் அசைத்து பாடியவர் எம்.ஜி.ஆர். வாட்ஸ்அப்பில் வரும் தகவல்கள் வரலாறு என நம்புவது பிரதமருக்கு அழகல்ல.

சொந்த கட்சியில் ஆளில்லாததால் மாற்றுக்கட்சியினரை வைத்து தி.மு.க.வை விமர்சிக்கிறார். தலைவர் இல்லாமல் வெளியில் இருந்து கடன் வாங்கி கட்சி நடத்த வேண்டிய தேவை தி.மு.க. வுக்கு இல்லை.

இப்போதுதான் சகோதரி கனிமொழி கூறிய சிலப்பதிகாரத்தின் முன்னுரையை மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் படிக்க தொடங்கி இருப்பார் என்று தெரிகிறது. ஒன்றும் அவசரம் இல்லை. முழுமையாக படிக்க காலஅவகாசம் உண்டு.

மத்திய நிதி மந்திரியின் கணவர் எழுதிய புத்தகத்தை மத்திய மந்திரிகள் அனைவரும் படிக்க வேண்டும். அந்த புத்தகத்தில், மீண்டும் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் இந்தியாவை காப்பாற்ற முடியாது என கூறப்பட்டுள்ளது.

ஜெயலலிதாவின் சட்டமன்ற நாடகத்துக்கு நீலிக்கண்ணீர் வடிக்கும் மத்திய நிதி மந்திரி, மணிப்பூர் சம்பவத்துக்கு ஏன் பதில் அளிக்க மறுக்கிறார்? ஒன்றரை மணி நேரம் நாடாளுமன்றத்தில் பேசிய பிரதமருக்கு மணிப்பூர் ஞாபகத்துக்கு வரவில்லை. ஓரிரு வரியில் மணிப்பூரை கடந்து சென்றார்.

தமிழகம் முன்னோடி

மக்கள் நலனில் அக்கறையில்லாத பிரதமர், உள்துறை மந்திரி தி.மு.க.வை விமர்சிக்கின்றனர். தமிழகத்தில் பா.ஜ.க.வின் அடிமையாக இருப்பது எடப்பாடி பழனிசாமிதான்.

நாங்கள் மாநில கட்சிதான். ஆனால் அனைத்து மாநில மக்களின் நலனுக்காக குரல் கொடுக்கும் ஒரே கட்சி தி.மு.க.தான். மக்கள் உரிமைகளை ஓங்கி ஒலித்து, நாடாளுமன்றத்தில் தி.மு.க. எம்.பி.க்கள் குரல் கொடுத்து வருகின்றனர். நம்மை பின்பற்றி பிற மாநில எம்.பி.க்களும் தைரியமாக பேசுவது மத்திய அரசுக்கு கோபத்தை உண்டு பண்ணுகிறது. மக்களாட்சிக்கு தமிழகம் முன்னோடியாக இருந்து 40 தொகுதிகளிலும் தி.மு.க. வெற்றி பெறும்.

இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு பேனாவுடன் கூடிய கருணாநிதி சிலையை நினைவுப்பரிசாக அமைச்சர் ராஜகண்ணப்பன், ராமநாதபுரம் மாவட்ட தி.மு.க. செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. ஆகியோர் வழங்கினார்கள்.

துரைமுருகன், கே.என்.நேரு, பொன்முடி, ஐ.பெரியசாமி, தங்கம் தென்னரசு, அனிதா ராதாகிருஷ்ணன், கீதாஜீவன் உள்ளிட்ட அமைச்சர்கள் மற்றும் கனிமொழி எம்.பி. ஆகியோர் கலந்து கொண்டனர்.

ராமநாதபுரத்தில் மீனவர் குடியிருப்பு பகுதிக்கு சென்று மீனவ மக்களுடன் ஸ்டாலின் கலந்துரையாடினார்

ராமநாதபுரம், ஆக. 18– ராமநாதபுரம் மாவட்டம், அக்காள்மடம் மீனவர் குடியிருப்பு பகுதிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று மீனவப் பெருமக்களிடம் கலந்துரையாடினார்.

முதலமைச்சர் ஸ்டாலின் நேற்று ராமநாதபுரத்திலிருந்து ராமேஸ்வரம் செல்லும் வழியில், பாம்பன் ஊராட்சி, அக்காள்மடம் மீனவர் குடியிருப்பு பகுதிக்கு நேரில் சென்று, அங்குள்ள மீனவர் குடும்பத்தினருடன் கலந்துரையாடினார்.

ராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்தில் இன்று நடைபெறவுள்ள தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் மற்றும் மீனவ சங்கங்கள் இணைந்து நடத்தும் மீனவர் நல மாநாடு மற்றும் மீனவர்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்து கொள்வதற்காக ராமநாதபுரத்திலிருந்து ராமேஸ்வரம் செல்லும் வழியில், அக்காள்மடம் மீனவர் குடியிருப்பு பகுதிக்கு முதலமைச்சர் நேரில் சென்று மீனவப் பெருமக்களிடம் அவர்களது

தேவைகள் குறித்து கேட்டறிந்தார்.

அப்போது, அப்பகுதி மக்கள் குடியிருப்பு பட்டா வேண்டுமென்று கோரிக்கை வைத்தனர். பட்டா வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று முதலமைச்சர் தெரிவித்தார். மேலும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் பயன்பெற விண்ணப்பித்து இருக்கிறீர்களா என்று அங்குள்ள பெண்களிடம் கேட்டறிந்தார். பொதுமக்கள் அளித்த கோரிக்கை மனுக்களையும் முதலமைச்சர் பெற்றுக் கொண்டார்.

அக்காள்மடம் மீனவர் குடியிருப்பு பகுதியில் உள்ள மாணவர்களுடன் முதலமைச்சர் கலந்துரையாடி, அவர்களது படிப்பு விவரங்கள் குறித்து கேட்டறிந்தார்.

அமைச்சர்கள் துரைமுருகன், தங்கம் தென்னரசு, ராஜகண்ணப்பன், சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், ராமநாதபுரம் கலெக்டர் விஷ்ணுசந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

தமிழ்நாட்டில் ஒருவருக்கும் கொரோனா இல்லை

சென்னை, ஆக.18– தமிழ்நாட்டில் நேற்று 503 பேருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது. அந்தவகையில், நேற்று ஒருவருக்கும் கொரோனா பாதிப்பு ஏற்படவில்லை. நேற்று கொரோனா பாதிப்பில் இருந்து யாரும் குணம் அடைந்து வீடு திரும்பவில்லை. மேலும் சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை 4 ஆக உள்ளது. இதைபோல, நேற்று தமிழ்நாட்டில் உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லை. மேற்கண்ட தகவல் மக்கள் நல்வாழ்வுத்துறை வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.

மின்சார வாகனங்களுக்கு சார்ஜிங் கட்டமைப்பு இணையதளத்தில் பதிவு செய்ய உத்தரவு

சென்னை, ஆக.18– தேசிய இணையவழி தரவுத்தளத்தில் மின்சார வாகன பொது சார்ஜிங் குறித்த தகவல்களை சார்ஜிங் நிலையத்தை இயக்குபவர்கள் சமர்ப்பிப்பதற்கான வரைவு ஆலோசனை வழங்கப்பட்டு உள்ளது. மின்சார வாகனங்களுக்கு சார்ஜிங் கட்டமைப்புகளுக்கான திருத்தப்பட்ட ஒருங்கிணைந்த வழிகாட்டுதல்களை மத்திய அரசின் மின்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

அதன்படி ஒவ்வொரு மாநில அரசும் மின்சார வாகனங்களுக்கான பொது சார்ஜிங் கட்டமைப்புகளை அமைப்பதற்கான தனி ஒருங்கிணைப்பு முகமையை நியமிக்க வேண்டும். குடியிருப்புச் சங்கங்கள், வணிக வளாகங்கள், அலுவலக வளாகங்கள், ஓட்டல்கள் போன்றவற்றில் பொது சார்ஜிங் நிலையங்கள் நிறுவப்பட்டு அங்கு வர அனுமதிக்கப்பட்டவர்களின் வாகனங்களை சார்ஜ் செய்ய அவற்றை பயன்படுத்திக்கொள்ளலாம். www.evyatra.beeindia.gov.in என்ற இணையதள முகவரியில் சார்ஜிங் நிலையங்களை இயக்குபவர்கள் பதிவு செய்ய வேண்டும். வாரந்தோறும் மாநில ஒருங்கிணைப்பு முகமை மூலம் தேவையான தரவுகளை சமர்ப்பிக்கவேண்டும். வழிமுறைகள் தேசிய எரிசக்தி துறையால் மதிப்பாய்வு செய்யப்பட்டு மாற்றப்படும் என்று மின்சார வாரியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி உள்ளது.

சுபமுகூர்த்த தினமான 21ந் தேதி, பத்திரப் பதிவுக்காக கூடுதல் டோக்கன்கள்: பதிவுத்துறை செயலாளர் ஜோதி நிர்மலாசாமி அறிவிப்பு

சென்னை, ஆக.18– சுபமுகூர்த்த தினமான வருகிற 21 ந் தேதி பத்திர பதிவுக்காக கூடுதல் டோக்கன் வழங்கப்படும் என பதிவுத்துறை செயலாளர் ஜோதி நிர்மலாசாமி தெரிவித்துள்ளார்.

வணிக வரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் ஜோதி நிர்மலாசாமி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

சுபமுகூர்த்த தினங்கள் என கருதப்படும் நாட்களில் அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் என்பதால் அன்றைய தினங்களில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று ஆவணப்பதிவுக்காக கூடுதல் முன்பதிவு டோக்கன்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

ஆவணி மாதத்தின் முதல் சுபமுகூர்த்த தினமான வருகிற 21ந் தேதி அதிகளவில் பத்திரப்பதிவுகள் நடைபெறும் என்பதால் சார்பதிவாளர் பணியில் உள்ள அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 முன்பதிவு டோக்கன்களும், 2 சார்பதிவாளர்கள் பணியில் உள்ள அலுவலகங்களுக்கு 200க்கு பதிலாக 300 முன்பதிவு டோக்கன்களும், அதிகளவில் ஆவணப்பதிவுகள் நடைபெறும் 100 அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 சாதாரண முன்பதிவு டோக்கன்கள் வழங்கப்படும்.

இதுதவிர ஏற்கனவே வழங்கப்படும் 12 தட்கல் முன்பதிவு டோக்கன்களுடன் கூடுதலாக 4 தட்கல் முன்பதிவு டோக்கன்களும் வழங்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

படிவம் எண். INC 25A
பப்ளிக் லிமிடெட் நிறுவனத்தை பிரைவேட் லிமிடெட்டாக மாற்றுவதற்காக பத்திரிக்கையில் வெளியிடப்பட வேண்டிய விளம்பரம்
பிராந்திய இயக்குனர் முன்பாக, கார்ப்பரேட் விவகாரங்கள் துறை அமைச்சகம், தென் பிராந்தியம்
நிறுவனங்கள் சட்டம் 2013, நிறுவனங்கள் சட்டம் 2013–ன் பிரிவு 14 மற்றும் நிறுவனங்கள் (துவக்கம்) விதிகள் 2014, விதி 41 விஷயத்தில் மற்றும்
மெசர்ஸ் கேகேஆர் இந்தியா அசெட் பைனான்ஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம்:
ரெகஸ் சிட்டி சென்டர், லெவல் 6, 10/11, டாக்டர் ராதாகிருஷ்ணா சாலை, சென்னை – 600 004. தமிழ்நாடு, இந்தியா
...விண்ணப்பதாரர்
31 ஜூலை, 2023 திங்கட்கிழமை அன்று நடைபெற்ற அசாதாரண பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சிறப்பு தீர்மானத்தின்படி, நிறுவனத்தை பிரைவேட் லிமிடெட் நிறுவனமாக மாற்றுவதற்கான நிறுவனங்கள் சட்டம் 2013, பிரிவு 14 மற்றும் மேற்சொன்ன விதிகளின் கீழ் அத்தகைய மாற்றத்தை மேற்கொள்ள மத்திய அரசுக்கு விண்ணப்பம் ஒன்றை தாக்கல் செய்ய நிறுவனம் திட்டமிட்டுள்ளது என்று பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
நிறுவனத்தின் அந்தஸ்தை மாற்றம்/திட்டமிட்டுள்ள மாற்றத்தினால் எவரது நலமேனும் பாதிக்கப்படுவதாக கருதுவாராயின், பாதிக்கப்படும் நலன் மற்றும் எதிர்ப்பதற்கான காரணத்தை பிரமாணப் பத்திரத்துடன் இணைத்து **பிராந்திய இயக்குனர், 5வது தளம், சாஸ்திரி பவன், 26, ஹாடோஸ் சாலை, சென்னை 600 006, தமிழ்நாடு** அவர்களுக்கு இந்த அறிவிப்பு வெளியான பதினான்கு நாட்களுக்குள் நேடியாக அளிக்கலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம். அதன் நகல் ஒன்றை விண்ணப்பதாரர் நிறுவனத்தின் கீழ்க்கண்ட பதிவு அலுவலக முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
ரெகஸ் சிட்டி சென்டர், லெவல் 6, 10/11, டாக்டர் ராதாகிருஷ்ணா சாலை, சென்னை – 600 004. தமிழ்நாடு, இந்தியா
விண்ணப்பதாரர் சார்பாக
கேகேஆர் இந்தியா அசெட் பைனான்ஸ் லிமிடெட்
ஒப்பம்/–
ராகேஷ் பஜாஜ்
நிர்வாக இயக்குனர்
DIN : 08957166
முகவரி : 2001, எஸ்டோனியா ஏ, ஹிராநந்தனி ஹெரிடேஜ், எஸ்.வி. ரோடு, கண்டிவலி மேற்கு, மும்பை – 400 067. மகாராஷ்டிரா, இந்தியா

அசல் நிலம் சொத்து / ஆவணம் காணவில்லை
V. ராஜ்குமார், த/பெ. திரு. வேலுசாமி, (ஆதார் எண். 4919 4214 8681) 44 வயது, கதவு எண். 4/299, வடக்கு தெரு, புதுக்கோட்டை கிராமம், சேந்தமங்கலம் வட்டம், நாமக்கல் மாவட்டம், தமிழ்நாடு - 637 013, என்ற முகவரியில் வசித்து வரும் நான், M. மாரியாயி, க/பெ. (லேட்) மூக்கன், காலம் சென்ற எனது பாட்டியின் பெயரில் உள்ள புதுக்கோட்டை கிராமத்தில் சர்வே எண். 103/7, 108/7, ஆவண எண். 69/1981, தேதி: 24-01-1981, எருமப்பட்டி சார் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட அசல் விற்பனைப் பத்திரம் 10.07.2023 அன்று எடுமப்பட்டி கைக்காட்டில் Indian Bank கிழே உள்ள ஜெராக்ஸ் கடையில் ஜெராக்ஸ் எடுத்து விட்டு அருகில் உள்ள காபி கடையில் காபி குடித்துவிட்டு பார்க்கும் போது தொலைந்து போனது. எங்கு தேடியும் கிடைக்கவில்லை. யாரேனும் எனது பாட்டியின் மேற்படி ஆவணத்தைக் கண்டால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரி மற்றும் தொலைபேசியில் தெரிவிக்கவும்.
V. ராஜ்குமார்,
எண். 4/299, வடக்கு தெரு, புதுக்கோட்டை கிராமம், சேந்தமங்கலம் வட்டம், நாமக்கல் மாவட்டம், தமிழ்நாடு - 637 013. செல்: 8344527455.

IN THE COURT OF THE XII ASST CITY CIVIL JUDGE AT CHENNAI
O.S.NO. 65 of 2022
STATE BANK OF INDIA (S.A.R.C)
Sma\l and Medium Enterprises Centre, No. 157, Anna Salai, 5th Floor, Chennai 600 002.
Rep. by its Manager .. Plaintiff
Vs.
M/s Om Sakthi Enterprises, Rep. by Prop. S.Kannan, No.167, Govindappa Naicken Street, Sowcarpet, Chennai 600 001 –Defendant
You are hereby summoned to appear in the court in person or by pleader duly instructed and able to answer all material questions relating to the original Suit or who shall be accompanied by some person able to answer all such question on the 12.9.2023 at 10.30 A.M. In the forenoon to answer the claim and as the day fixed for your appearance . Take notice that in default of your appearance on the day before mentioned the suit will be heard or determined in your Absence.
M.Suresh
COUNSEL FOR PLAINTIFF

IN THE COURT OF THE COMMERCIAL COURT EGMORE AT CHENNAI
C O.S.NO. 14 of 2022
STATE BANK OF INDIA (S.A.R.C)
Small and Medium Enterprises Centre, No. 157, Anna Salai, 5th Floor, Chennai 600 002.
Rep. by its Manager .. Plaintiff
Vs.
M/s New Galaxy Gym, Rep. by its Prop. Vijayakumar, No. 744/548, T.H. Road, Old Washermanpet, Chennai -600 021 –Defendant
You are hereby summoned to appear in the court in person or by pleader duly instructed and able to answer all material questions relating to the original Suit or who shall be accompanied by some person able to answer all such question on the 30.10.2023 at 10.30 A.M. In the forenoon to answer the claim and as the day fixed for your appearance. Take notice that in default of your appearance on the day before mentioned the suit will be heard or determined in your absence.
M.Suresh
COUNSEL FOR PLAINTIFF

பெயர் மாற்றம்
நான், மகேஷ்வரி க/பெ. சோ.பழனிவேல் பிறந்த தேதி 20–மே–1963. எண்: 1, புது தாண்டவராயன் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை – 600021 என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **ப.மகேஷ்வரி** என அழைக்கப்படுகிறேன்.
இப்படிக்கு ப.மகேஷ்வரி

பெயர் மாற்றம்
நான், **T.S NALINI**, க/பெ. கோவிந்தராஜன், பிறந்த தேதி: 01.08.1955 பிறந்த மாவட்டம்: சென்னை, வசிப்பிடம்: C-240, 11வது தெரு, பெரியார் நகர், சென்னை - 600 082. இனி முதற்கொண்டு **G.NALINI** என்று அழைக்கப்படுவேன்.
T.S NALINI

பெயர் மாற்றம்
சாந்த மாரி (Santha Marie), கனவர் பெயர் திரு. ஜகன் பிரபு, (Jagan Prabhu) பிறந்த தேதி: 21 ஏப்ரல் 1986, எண். 22, தெற்கு போக் ரோடு, ஜேகே பிளாட்ஸ், ஜே9, தியாகராய நகர், சென்னை, தமிழ் நாடு - 600 017, இந்தியா. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி
சாந்த மாரி (SHANTHA MARIE) என்று அழைக்கப்படுகிறேன்
சாந்த மாரி
(Santha Marie)

CHANGE OF NAME
I, Nilofhar W/o, Abdul Khalick, Date of Birth 17.06.1968 (Native District Trichy) Residing at New 25, S2 flat, Muthu Amman kovil, Street, Ayanavaram, Chennai-600023. Shall henceforth be known as **NEELOFHAR**
Nilofhar

பெயர் மாற்றம்
M.Mahender தந்தையின் பெயர்: Motilal Jain, பிறந்த தேதி: 15.09.1970, (சொந்த மாவட்டம் தமிழ்நாடு) எண்.181, சூரப்பேட் மெயின் ரோடு, விநாயகபுரம் சென்னை-600099, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனிமேல் MITHALAL JAIN என்று அழைக்கப்படுகிறேன்.
M. MAHENDER

பொது அறிவிப்பு
பெருங்குடி, குறிஞ்சி நகர் முதல் பிரதான சாலை, எண்.2ஏ என்ற முகவரியில் வசிக்கும் வி. விஷ்வேஷ், த/பெ. லேட். எஸ். வெங்கடபதி, ஆகிய நான் திருப்போரூர் சார் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட 2571/1997 என்ற ஆவண எண் கொண்ட அசல் விற்பனை பத்திரத்தை தொலைத்துவிட்டேன். அனைவருக்கும் நான் இதன்மூலம் தெரிவிப்பது யாதெனில், மேற்சொன்ன அசல் ஆவணத்தை யாரேனும் கண்டெடுத்தால் உடனடியாக என்னிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். மேற்கண்ட சொத்து தொடர்பாக எதிர்காலத்தில் வரும் எந்த கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப்படாது மற்றும் அது எந்த வகையிலும் என்னைக் கட்டுப்படுத்தாது. இது எனது தாழ்மையான வேண்டுகோள்.
வி. விஷ்வேஷ்

Before the District Consumer Disputes Redressal Commission Chennai (South), Chennai - 600 003
C. C. No. 140 of 2023
Satya MitraBagga
S/o Mr.Navin Chandra Bagga
... Complainant
-Versus-
S. Balasubramanian
Zenith Interior ...Opposite Party
To:
S. Balasubramanian
Zenith Interior
22, 67, North Mada Street
Kamraj Nagar Thiruvanmayur
Chennai- 600 041
...Opposite Party
Please take notice that the above named Complainant has filed the above said C.C.No.140 of 2023 against you for refund of money or rectification of defects along with compensation and litigation expenses, wherein, the above said Hon'ble District Consumer Disputes Redressal Commission, Chennai - South was pleased to order paper publication as a substitute service against you returnable by 01-09-2023.
You are hereby summoned in cause and appearance to be entered for you, either in person or through counsel on 01-09-2023 at 10.30 a.m., before the above said Hon'ble District Consumer Disputes Redressal Commissioner, Chennai - South, failing which the above said C.C.No.140 of 2023 will be heard and decided in your absence as an ex parte.
T. VANITHASRI ROHINI DEVI
Counsel For Complainant
Mobile: 9751398648

ஹீரோ பின்கார்ப் லிமிடெட்
Hero FinCorp.
CIN: U74899DL1991PLC046774
பதிவு அலுவலகம்: 34, கம்யூனிட்டி சென்டர், பசந்த் லோக், வசந்த் விஹார், புதுடெல்லி 110057
தொலைபேசி: 011–49487150, பேக்ஸ்: 011–49487150
மின்னஞ்சல்: litigation@herofincorp.com ll **வலைதளம்:** www.herofincorp.com
கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(2)ன் கீழ் அறிவிப்பு
இதன் மூலம் அறிவிப்பு அனுப்பப்படுகிறது.
1. M/s. **புங்கராஜா மில்க் ஏஜெண்சி (கடன்தாரர்/முகவரி எண். 1) அதன் உரிமையாளர் மூலம், திரு. ஏ. புங்கராஜா,** வசிப்பிடம் எண். 5/2, 5வது பிளாக், புஷ்பா நகர், நுங்கம்பாக்கம் சென்னை 600034, மின்னஞ்சல்: pungaraja21@gmail.com, தொலைபேசி.9940040327
2. **திரு. ஏ. புங்கராஜா, (உடன் கடன்தாரர்/முகவரி எண். 2) உரிமையாளர்,** M/s. **புங்கராஜா மில்க் ஏஜெண்சி** வசிப்பிடம் எண். 34 அண்ணா தெரு, வளசரவாக்கம், திருவள்ளூர், ஆழ்வார்திருநகர், தமிழ்நாடு 600087, மின்னஞ்சல்: pungaraja21@gmail.com, தொலைபேசி.9940040327
3. **திருமதி. பி. சூர்யகுமாரி (உடன் கடன்தாரர்/முகவரி எண். 3)** வசிப்பிடம் எண். 34 அண்ணா தெரு, வளசரவாக்கம், திருவள்ளூர், ஆழ்வார்திருநகர், தமிழ்நாடு 600087, மின்னஞ்சல்: pungaraja20@gmail.com, தொலைபேசி.9962876831
(இனி ''கடன்தாரர்கள்'' என குறிப்பிடப்படுவார்கள்)
1. மேற்கூறிய கடனாளிகள் முறையே 29.04.2021 மற்றும் 28.03.2022 தேதியிட்ட கடன் ஒப்பந்தங்களில் M/s. ஹீரோ பின்கார்ப் லிமிடெட் (இனி ''எச்எப்சிஎல்'' என்று குறிப்பிடப்படும்), பதிவு அலுவலகம்: 34, சமூக மையம், பசந்த் லோக், வசந்த் விஹார், புதுடெல்லி 110057–ல் சொத்துக்கு எதிரான 29.04.2021 தேதியிட்ட கடன் அனுமதிக் கடிதம் எண்.12565977 மற்றும் 28.03.2022 தேதியிட்ட 24357833 ஆகியவற்றின் மூலம் ரூ.1,67,00,000/– (ரூபாய் ஒரு கோடியே அறுபத்தேழு லட்சம் மட்டும்) [இனி "நிதி வசதி–1 என குறிப்பிடப்படுகிறது] மற்றும் ரூ.35,35,000/– (ரூபாய் முப்பத்தைந்து லட்சத்து முப்பத்தைந்து ஆயிரம் மட்டும்) [இனி "நிதி வசதி –2" என்று குறிப்பிடப்படுகிறது] ஆகிய கடன் தொகையை பெற்றுள்ளனர்.
2. மேற்கூறிய ஈடுபெற்ற நிதி வசதிகள், எச்எப்சிஎல்–ல் வைக்கப்பட்டுள்ள பின்வரும் சொத்துக்கு ஆதரவாக, 25.06.2021 தேதியிட்ட பத்திரங்கள் மற்றும் 07.04.2022 தேதியிட்ட துணை M.O.D.T தேதியிட்ட பத்திரங்கள் மூலம் வரிசை எண்.3–ல் உள்ள தங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
''சென்னை – 600 087, வளசரவாக்கம், அண்ணா தெரு, கதவு எண்.53/34–ல் உள்ள 3125 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். கிராம நத்தம் பழைய சர்வே எண்.179 பகுதி, புதிய சர்வே எண்.253/14. இந்த சொத்தானது வளசரவாக்கம் கிராமம், மதுரவாயல் தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ளது. நிலத்தின் எல்லைகள்: வடக்கில் : அண்ணா தெரு, தெற்கில் : மோகன் ப்ரீவரீஸ் சுவர், கிழக்கில் : சுப்பிரமணியன் வீடு, மேற்கில் : பாலகிருஷ்ணன் மற்றும் அந்தோணி அவர்களுக்கு சொந்தமான மனைகள். இந்த சொத்து விருகம்பாக்கம் சார் பதிவு மாவட்டம் மற்றும் தென் சென்னை பதிவு மாவட்ட எல்லையில் அமைந்துள்ளது."
(இனிமேல் "ஈடுபெற்ற சொத்து" என்று குறிப்பிடப்படுகிறது)
மேலே குறிப்பிடப்பட்ட சொத்து இனி "ஈடுபெற்ற சொத்து" என்று குறிப்பிடப்படும். வட்டி மற்றும் பிற கட்டணங்களுடன் சேர்ந்து கடன் தொகையை திருப்பிச் செலுத்துவதற்கு செக்யூரிட்டியாக ஈடுபெற்ற சொத்து எச்எப்சிஎல்–ல் அடமானம் வைக்கப்பட்டுள்ளது. இருப்பினும், கடன்தாரர் வட்டி மற்றும் பிற கட்டணங்களுடன் கடனை திருப்பிச் செலுத்துவதில் இருந்து தவறிவிட்டார். இது சம்பந்தமாக, கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(2)ன் கீழ் (இனிமேல் "SARFAESI சட்டம், 2002" என குறிப்பிடப்படுகிறது) 13.07.2023 அன்று டிமாண்ட் நோட்டீஸ் எச்எப்சிஎல்–லிருந்த மேற்சொன்ன கடன்தாரர்களின் கடைசியாக அறியப்பட்ட முகவரிகளுக்கு அனுப்பப்பட்டது.
இந்த வெளியீட்டின் மூலம், கடன்தாரர் மற்றும்/அல்லது உடன் கடன்தாரர் ஆகியோரை இந்த அறிவிப்பு வெளியான 60 நாட்களுக்குள் 06.07.2023 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கி நிலுவைத் தொகை ரூ.2,00,74,706.01/–ஐ (ரூபாய் இரண்டு கோடியே எழுபத்து நான்காயிரத்து எழுநூற்று ஆறு மற்றும் ஒரு பைசா மட்டும்) செலுத்துமாறு எச்எப்சிஎல் இதன்மூலம் மறுபடியும் கேட்டுக் கொண்டுள்ளது. அவ்வாறு செலுத்த தவறும்பட்சத்தில், SARFAESI சட்டம் 2002ன் கீழ் கடன்தாரர்/உடன் கடன்தாரர்களின் ஈடுபெற்ற சொத்துக்களை சுவாதீனம் மற்றும் விற்பன